இந்த நல்லாட்சியில், கொங்குமண்டலத்தில் பல வரலாற்றுச் சம்பவங்களுக்குப் பெயர்போன புண்ணிய பூமியாக விளங்குகின்ற அவினாசி தொகுதியில் தேவம்பாளையம், பச்சாம்பாளையம், ஆயிக்கவுண்டன்பாளையம், ராஜன் நகர், அவினாசிலிங்கம்பாளையம் ஆகிய ஆதிதிராவிட காலனிகளை இந்து அறநிலையத்துறை சார்பாக எடுத்து, அவற்றுக்கு நிதியுதவி வழங்கப்படுமா என்று கேட்பதோடு, இந்தப் புனித புண்ணியவதியினுடைய ஆட்சியில் எத்தனைக் கோவில்கள் ஒருகால பூஜையினால் பயன்பெறுகின்றன என்பதை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும் ஆதிதிராவிட மக்களால் பராமரிக்க முடியாத, இந்த அறநிலையத்துறைக்கு உட்படாத கோவில்கள் எல்லாவற்றையும் அரசே எடுத்து அவற்றுக்கு உதவித் தொகை வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதி, தேவம்பாளையம் அருள்மிகு அண்ணன்மார் சுவாமி ஆலயம், பச்சாம்பாளையம் அருள்மிகு பட்டத்து அரசி அம்மன் ஆலயம், ஆயிக்கவுண்டன்பாளையம் அருள்மிகு அண்ணன்மார் சுவாமி ஆலயம், ராஜன் நகர் அருள்மிகு பெருமாள் ஆலயம், அவினாசிலிங்கம் அருள்மிகு பட்டத்துஅரசி ஆலயம் ஆகிய மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதி திராவிடப்பகுதிகளில் அமைந்துள்ள ஆலயங்களை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் விண்ணப்பித்தால், அரசே அதை எடுத்து, வேண்டிய நிதி உதவிகளைச் செய்து, திருப்பணிகளைச் செய்யும் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். அதுபோல, பெருமாள் ஆலயம் என்ற ஆலயம் பற்றியும் குறிப்பிட்டார்கள். அப்படி ஒரு ஆலயம் அந்த இடத்தில் இல்லை. மேலும் ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் இதுவரை *7,170* திருக்கோவில்கள் பயன்பெற்றுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

114--

ஊராட்சி ஒன்றியத்தில் இணைக்கும் திட்டம்

***38121**--திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்:*

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 பிப்ரவரி 23]

முகையூர் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், காங்கியம் ஊராட்சி மற்றும் சித்தாமூர் ஊராட்சியைச் சேர்ந்த காந்திநகர் கிராமத்தை முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

முகையூர் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம் காங்கியம் ஊராட்சி மற்றும் சித்தாமூர் ஊராட்சியைச் சேர்ந்த காந்திநகர் கிராமத்தை முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் இணைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் கருத்துரு ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டம் குறும்பனை மீனவ கிராமத்திலிருந்து சென்ற மீனவர்கள் காணாமற்போனது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையை முடித்த பிறகு....

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாக சீரோ அவரில் நாங்கள்தான் எழுந்து நிற்போம். இப்போது அமைச்சரும் எழுந்து நிற்கிறாரே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி அமைதியாக இருந்ததினாலே. (சிரிப்பு) டாக்டர் தே. குமாரதாஸ், கன்னியாகுமரி மாவட்டத்தில், குறும்பனை மீனவர் கிராமத்திலிருந்து கர்நாடக மாநிலத்திலுள்ள மல்பி என்ற இடத்திற்கு ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்ற 5 மீனவர்களைக் கடந்த ஒரு மாத காலமாகக் காணவில்லை என்பது குறித்து பேரவையில் எழுப்பி அரசின் கவனத்தை ஈர்க்க